# 10 திருக்குறள்

## பேதைமை

பேதமை என்றால் எதுவும் அறியாத தன்மை என்று பொருள்படும்.

1. பேதைமை என்பதுஒன்று யாதெனின் ஏதம்கொண்டு
   ஊதியம் போக விடல்

**பேதைமை என்பது** - பேதைமை என்று சொல்லப்படும் **ஒன்று யாது எனில்** - ஒன்று எது என்றால் **ஏதம் கொண்டு ஊதியம் போகவிடல்** - தனக்குக் கேடு பயப்பனவற்றைக் கொண்டு நன்மை தருபனவற்றைக் கைவிடுதல் ஆகும்.

பேதைமை என்று சொல்லப்படுவது யாது என்றால் தனக்குக் கெடுதியானதைக் கைக்கொண்டு ஊதியமானதைக் கைவிடுதலாகும்.

2. பேதைமையுள் எல்லாம் பேதைமை காதன்மை
   கையல்ல தன்கண் செயல்

**பேதைமையுள்ள எல்லாம் பேதமை** - ஒருவனுக்கு அறியாமை எல்லாவற்றிலும் அறியாமை **கையல்ல தன் கண் காதன்மை செயல்** - தனக்குப் பொருந்தாத ஒழுக்கத்தில் ஆசை கொள்ளுதல்.

ஒருவனுக்குப் பேதைமை எல்லாவற்றிலும் மிக்க பேதைமை தன் ஒழுக்கத்திற்குப் பொருந்தாததில் தன் விருப்பத்தைச் செலுத்துதலாகும்.

3. நாணாமை நாடாமை நாட இன்மை யாதென்றும்
   பேணாமை பேதை தொழில்

**நாணாமை** - நாண வேண்டியவற்றுக்கு நாணாமையும் **நாடாமை** - நாட வேண்டியவற்றை நாடாமையும் **நார் இன்மை** - யாரிடத்திலும் அன்பு இல்லாமையும் **யாது ஒன்றும் பேணாமை பேதை தொழில்** - பேண வேண்டியவற்றுள் விரும்பிக் காவாமையும் அறிவிலிகளின் தொழில்.

தகாதவற்றிற்கு நாணாமலிருத்தல், தக்கவற்றை நாடாமலிருத்தல், அன்பு இல்லை, நன்மை ஒன்றையும் விரும்பாமை ஆகியவை பேதையின் தொழில்கள்.

4. ஓதி உணர்ந்தும் பிறர்க்குஉரைத்தும் தான்அடங்காப்
பேதையின் பேதையார் இல்

**ஓதி** - மனமொழி மெய்கள் அடங்குவதற்கு ஏற்ற நூல்களை கற்று அறிந்தும் **உணர்ந்தும்** - அவ்வடக்கத்தால் வரும் பயனை உணர்ந்தும் **பிறர்க்கு உரைத்தும்** - கற்றவற்றை மற்றவர்களுக்கு எடுத்துச் சொல்லியும் **அடங்காப் பேதையின்** - தான் அவையடங்கி ஒழுகாத அறிவிலி போல **பேதையர் இல்** - அறிவிலிகள் இல்லை.

நூல்களை ஓதியும், அவற்றின் பொருளை உணர்ந்தும், பிறர்க்கு எடுத்துச் சொல்லியும் தான் அவற்றின் நெறியில் அடங்கி ஒழுகாத பேதை போல் வேறு பேதையர் இல்லை.

5. ஒருமைச் செயல்அற்றும் பேதை எழுமையும்
தான்புக்கு அழுந்தும் அளறு

**பேதை** - அறிவிலி **எழுமையும் தான் புக்கு அழுந்தும்** - அளவுடைய ஏழு பிறப்பிலும் புகுந்து வருத்தும் நரகத்தை **ஒருமை செயல் ஆற்றும்** - தன் ஒரு பிறவியில் உருவாக்கிக் கொள்வான்.

எழுபிறப்பிலும் தான் புகுந்து அழுந்துவதற்கு உரிய நரகத் துன்பத்தைப் பேதை தன் ஒரு பிறவியில் செய்துகொள்ள வல்லவனாவான்.

6. பொய்படும் ஒன்றோ புனை பூணும் கையறியாப்
பேதை வினைமேல் கொளின்

**கையறியாப் பேதை வினைமேற் கொளின்** - செய்யும் வகை அறியாத அறிவிலி ஒரு செயலைச் செய்தால் **பொய்படும் ஒன்றோ புனை பூணும்** - அது முழுமையாகப் பாழ்படும். மேலும் தண்டனை பெற்று விலங்கிடப்படுவான்.

ஒழுக்கநெறி அறியாத பேதை ஒரு செயலை மேற்கொண்டால் (அந்தச் செயல் முடிவுபெறாமல்) பொய்படும் அன்றியும் அவன் குற்றவாளியாகித் தளை பூணுவான்.

7. ஏதிலார் ஆரத் தமர் பசிப்பர் பேதை
பெரும்செல்வம் உற்றக் கடை

**பேதை பெருஞ் செல்வம் உற்றக்கடை** - அறிவிலி பெரும் செல்வத்தை தெய்வத்தால் பெற்றால் **ஏதிலார் ஆரத் தமர் பசிப்பர்** - உறவில்லாதவர் அதன் பயனை அனுபவிக்க, உறவினர் பசியால் வருந்துவர்.

பேதை பெருஞ் செல்வம் அடைந்தபோது, (அவனோடு தொடர்பில்லாத) அயலார் நிறைய நன்மை பெற, அவனுடைய சுற்றத்தார் பசியால் வருந்துவர்.

8. மையல் ஒருவன் களித்தற்றால் பேதைதன்
கையொன்று உடைமை பெறின்

**பேதை தன் கை ஒன்று உடைமை பெறின்** - அறிவிலி தன்னிடம் ஒரு பொருளைப் பெற்றால் **மையல் ஒருவன் களித்தற்று** - பைத்தியமான ஒருவன் மது குடித்து மயங்கியது போல நடந்து கொள்வான்.

பேதை தன் கையில் ஒரு பொருள் பெற்றால் (அவன் நிலைமை) பித்துப் பிடித்த ஒருவன் கள் குடித்து மயங்கினாற் போலாகும்.

9. பெரிதுஇனிது பேதையார் கேண்மை பிரிவின்கண்
பீழை தருவதுஒன்று உடைமை பெறின்

**பிரிவின்கண் தருவது பீழை ஒன்று இல்** - அறிவிலியிடமிருந்து பிரிவு நேர்ந்தபோது அப்பிரிவு துன்பம் தருவதில்லை. **பேதையார் கேண்மை இனிது** - ஆதலால் அறிவிலிகளின் நட்பு மிகவும் இனியது.

பேதையாரிடமிருந்து பிரிவு நேர்ந்தபோது அப்பிரிவு துன்பம் ஒன்றும் தருவதில்லை. ஆகையால் பேதையருடன் கொள்ளும் நட்பு மிக இனியதாகும்.

10. கழாஅக்கால பள்ளியுள் வைத்தற்றால் சான்றோர்
குழாஅத்துப் பேதை புகல்

**சான்றோர் குழாத்துப் பேதை புகல்** - சான்றோர் அவையில் அறிவிலி புகுவது **கழாக்கால் பள்ளியுள் வைத்தற்றால்** - தூய்மையானவற்றை மிதித்துப் பின்பு கழுவாத காலை படுக்கையில் வைப்பது போன்றது.

சான்றோரின் கூட்டத்தில் பேதை புகுதல், ஒருவன் தூய்மையில்லாதவற்றை மிதித்துக் கழுவாத காலைப் படுக்கையில் வைத்தாற் போன்றது.

## வினாக்கள்

1. பேதைமை என்றால் என்ன என்பதற்கு வள்ளுவர் கூறும் வரைவிலக்கணம் யாது?
2. பேதைமையுள் பெரும் பேதைமை என வள்ளுவர் எதனைக் குறிப்பிடுகின்றார்?
3. சான்றோர் கூட்டத்தில் பேதை புகுதலை வள்ளுவர் எதற்கு உவமிக்கின்றார்?
4. பேதையர் நட்பு இனிமையானது என்பது பற்றி உமது நடையில் கட்டுரை வரைக.


இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக